www.padippakam.com

அரும்பு ⑤
இதழ் ⑤

ஆசிரியர்
அருந்தீ

# அரும்பு

# ARUMPU



CHANCHIVE
Danmarksgade 10
7500 Holstebro
Danmark

www.padippakam.com

# அரும்பு



பிரதிபலிப்பு : 5

ஆடி ஆவணி

வெளியீடு : இரண்டு திங்களுக்கு ஒன்று

தொடர்பு : S. Swagnanam
Axelborg 7 B, 2. th.
8700 Horsens, tlf. 75 61 25 64
Denmark

படிப்பகம்

www.padippakam.com

22/11/91 

# கடலே கடலே

★★★★★★★★★★

கடலே

அழகான கடலே
வெள்ளி நுரையை தரையில் தள்ளும் கடலே உனது லட்சியம்தான் என்ன? வானத்தை தொட்டுத்தானே உன் அலைக்கரங்கள் உயர உயர நீட்டுகிறாய் அலை அடித்து உன்னால் வானத்தை எட்டமுடியுமா? முடியாதே! பிறகு ஏன் முயற்சி எடுக்கிறாய். சீறுமா அமைதிகொள். இரவில் பார்க்கலாம் என்கிறாயா. வானத்தைத்தொட்டுப்பார்க்கக் கூட முடியாத நீ பூமியை அரிப்பது ஏன்? இல்லை அழிப்பது ஏன்? அது உன்னைத் தாங்கிக்கொள்ளும் நன்றியினாலா அல்லது கொண்ட லட்சியத்தை அடைய முயற்சிசெய்பவர்கள் அது முடியாது விட்டால் தமக்கு உதவிசெய்பவர்களையும் படிப்படியாக அழித்துவிடுவார்கள் என்பதனாலா! எதுவாக இருந்தாலும் நான்மட்டும் உன்னை வெறுக்கப்போவதில்லை.

★★★★★★★★★★★★★★★★★★★★

**கொடிய விலங்கைச் சாந்தப்படுத்தவும், பாறைகளை நெகிழ்விக்கவும், தேக்குமரத்தை வளைக்கவும் கூடிய வசிய சக்திகள் இசையில் இருக்கின்றன. — காஸ்கிரீவ்**

படிப்பகம்

www.padippakam.com

# பந்து யார் பக்கம்?




பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கம் என்றும் இல்லை அது விடுதலைப்புலிகளின் பக்கம் என்றும் இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கத்தினரும் வெளியிட்டுவரும் கருத்து காலகாலமாகப் பேசப்பட்டுவரும் இனவிடுதலையில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையை அரசாங்கம் ஒரு தீர்வுக்கு கொண்டுவரப் போவது எனக் கூறுவது தற்காலிக ஒரு இடைவேளையோ அல்லது மீண்டும் தன்னைத்தயார் படுத்துவதற்காகவோ ஏற்படுத்திக்கொள்ளப் போகும் ஒரு யுத்தநிறுத்த நடவடிக்கையே! ஒரு பகுதியில் தமிழர்களைக் கொலைசெய்து கொண்டும் இன்னொரு பகுதியில் எமது கதவுகள் திறக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறிவருவது தொடர்ந்தும் எமது இனத்தை முற்றாக அழிக்கும் ஒரு திட்டமிட்ட நடவடிக்கையே!

பொது ஜனம்

படிப்பகம்

www.padippakam.com





# ஆசிரியர் பேனாவிலிருந்து...

என்றினிய நண்பர்களே.!

அரும்பு இதழ் நான்கிற்கு நீங்கள் தந்த ஆதரவைக் கண்டு, நாம் அளவில்லாத மகிழ்ச்சியடைகிறோம். எமது இதழ் பற்றி வாசகர்கள் பலவிதமான கருத்துக்களை தொலைபேசியிலும், நேரிலும், கடிதங்கள் மூலமாகவும் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுடைய கருத்துக்களை பின்வருமாறு - தொகுத்து நோக்கலாம்.

அ. மற்றச்சஞ்சிகைகள் போலல்லாது தனி அமைப்போடு வெளியிடப்படுவது.

ஆ. தமிழர் கலை கலாச்சார இலக்கியச் செய்திகளோடு, வேறு பல பொதுவான செய்திகளையும் பிரசுரிப்பது.

இ. தமிழ்நாட்டிலிருந்து வெளியிடப்படும், தரமான- இங்கு கிடைக்காத செய்திகளை வெளியிடுவது. அதேவேளை- சொந்த ஆக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது சொந்த ஆக்கங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது.

ஈ. புதிய இளம் எழுத்தாளர்களை உருவாக்குவது, அவர்களை எழுதத் தூண்டுவது.

உ. ஓவியர்களை உருவாக்குவது, தாய்நாட்டில் நடைபெறும் தகவல்களைச் சேகரித்து வெளியிடுவது. போன்ற- பல நல்ல கருத்துக்களை வாசகர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



சமுகத்தோடு சேர்ந்து, மக்களின் நன்மை தீமைகளில் பங்கெடுத்து, அவர்களைப்பற்றித்தெரிந்துகொண்டு, அவர்களது கருத்துக்களை இலக்கிய ஆளுகைக்கு உட்படுத்தி, எழுதுவதே அரும்பு இதழின் நோக்கமாகும். பேனாவைக் கையில்வைத்துக்கொண்டு, அந்தப்பேனாவிற்கு தீனிபோடுவதற்காக, சமுகத்தை மேலோட்டமாகப் பார்வையிட்டு, சரியானகருத்துக்களை தெரிந்துகொள்ளாமல், அல்லது தெரிந்துகொள்ளவிரும்பாமல், எழுதநினைப்பது, அல்லது முற்படுவது பத்திரிகா தர்மத்திற்கு அப்பாற்பட்டது.

எமதுஎழுத்துக்களும், கருத்துக்களும் இலக்கியநோக்கத்தோடு செயற்பாடுகளை ஒன்றுபடுத்தி எதிர்காலத்தில் - தாய்நாட்டின் விடுதலையை மையமாகக்கொண்டும் ஆக்கங்களை வெளியீடு செய்தும், பழைய இலக்கியப் படைப்புகளோடு நிகர் நிற்கக்கூடிய புதிய இலக்கியங்களை வெளியிட்டும், பெரியவர்கள், மாணவச்செல்வங்கள், அனைவரும் படித்துப்பயன்பெறக்கூடிய விதத்தில் சிறந்த தரமான இதழாக அரும்பு இதழை ஆக்கி நாம் தொடராக பல முயற்சிகளை மேற்கொண்டுவருகிறோம்.

ஆசிரியர்



அரும்பை வாசிக்கும் வாசகர்களின் எண்ணிக்கையோ நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்துவருகிறது. நாம் வெளியிடும் பிரதிகளின் எண்ணிக்கையோ குறைந்தளவிலேயே உள்ளது. விரைவில் அனைவரும் பெறக்கூடியளவில் அதிக பிரதிகள் வெளிவரும் என்பதை அறியத்தருகிறோம்.

ஆசிரியர்.
அரும்பு வெளியீட்டகம்

படிப்பகம

www.padippakam.com



# மறைவான நெஞ்சொன்று.

— [illegible] —

வருகின்ற போதினிலே வழியனுப்ப வந்தாயே!
துயில்கின்ற போதினிலே தோன்றுகின்ற மர்மமென்ன?
என்னிச்சையாக நான் நடந்தால் பூமியிலே...
மன்னிக்க வேண்டும் மறைவான நெஞ்சொன்றே..!
என்றனையே நான் அடைக்கலமாக்கி மறைவாக
உன்னோடு பண்ணாகப் பாடி மகிழ்வது எக்காலம்?
பஞ்சமா பாதகர்கள் பார்த்திருக்க நான்மறைந்து
தஞ்சமே நீயென வருவதுதான் எக்காலம்.?
எங்கும் ஒளிக்கதிராய் காட்சிதரும் பகலவனின்
தங்கக் கதிர் ஒளியில் கலப்பதுதான் எக்காலம்?
கண்கவரும் மங்கை காதல் நிழல்விட்டு;
தன்விருப்பு வேறின்றி சேர்வதுதான் எக்காலம்?
ஐம்புலனும் நான் வென்று அமரரிடம் ஆகிர
அம்புவியில் மாய்ந்தவன்சேர்வதுவும் எக்காலம்?
சின்னப் பிராயத்தில் நான் செய்த பாவமெல்லாம்
உன்னைத் தெரியாமல் செய்ததோ நானறியேன்
பேச்சிலே உற்றோர் சொற்கேட்டு மனமோசம்
மூச்சிலே உன் நாமம் சொன்னதும் பொய்யாமோ?

கலையரசு இதழில் 1971ல் இக்கவிதை வெளியானது.

படிப்பகம்

# வையத் தலைவன்

வருவான் ஒருவன் வையத் தலைவன்
வரவை என்றும் எதிர்பார்ப்போம்
தருவான் நலமே பெறுவான் தீமை
தலைவன் வர நாம் தவம் ஏற்போம்

ஊழிகள் தோறும் உணர்வுகள் மங்கி
உலகின் நடையே தடுமாறிப்
பாசென விசுவின் பற்றிடும் அவனைப்
பாரில் மீண்டும் எதிர் பார்ப்போம்.

கண்ணன் ராமன் பகவான் புத்தன்
கருணை யேசு நபி என்றே
மண்ணில் எண்ணில் முறைகள் வருவான்
மறுபடி மறுபடி வரவேற்போம்.

உண்மை தேய்ந்தால் ஒழுக்கம் மாய்ந்தால்
உத்தமர் உள்ளம் மிக நொய்ந்தால்
இன்மை உடைபட்டிட வருவேன் என்றான்
திரும்ப அவனை வரவேற்போம்.

www.padippakam.com



நன்றே வாழ தீமைகள் வீழ
நமக்கோர் தலைவன் வரவேண்டும்
இன்றோ நாளை பொழுதோ அறியாமல்
எந்தக் கணமும் எதிர் பார்ப்போம்.

— தம்பி.

★

## கனவில் மணமக்கள் வந்தால்!

மணமக்களைக் கனவில் கண்டால் உங்கள் வாழ்க்கையில் இதுவரை நடைபெற்று வந்த கஸ்டங்கள் யாவுமாறி நலவசதிகளுடன். வாழ்வீர்கள். மணமகள் மட்டும் தனியே கனவில் கண்டால் ஒரு பெண்மணியினால் பல உதவிகள் கிடைக்கும்.

மணி

★

இடமின்மை காரணமாக சிறுவர் பூங்கா பகுதி இடம் பெறவில்லை அடுத்த இதழில் வெளிவரும் என்பதை அறியத் தருகிறோம்.

ஆ—ர்

படிப்பகம்

# ★ மின்னல் மின்னும்போது

உயரமான மரத்தின் அடியில் நிற்கக்கூடாது.

தண்ணீரில் நிற்கக் கூடாது.

உலோகப் பொருட்கள் வைத்திருக்கக் கூடாது.

சைக்கிள் ஸ்கூட்டர் இவற்றில் பயணம் செய்யக் கூடாது.

ரேடியோவைப் போட்டுக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது.

கதவு ஜன்னல் இவற்றின் அருகில் நிற்கக் கூடாது.

## ★ பெண்

மாதரில் மெல்லியகொடி, மானின்விழி, வானவில்லின் உல்லாசம் காலைப்பனியின் நீர்த்துளிகள் நிலையில்லாத காற்று புயலின் அச்சம். மயிலின் செருக்கு வைரம் போன்ற கடினமான நெஞ்சு வாசனையான தேன், சிங்கத்தின் கம்பீரம், தழலின் வெப்பம். நீரின் குளுமை பறவைகளின் மகிழ்ச்சி. குயிலின் கானம் மலர்ந்த மலரின் நறுமணம் இவையாவும் கலந்ததொரு அபூர்வ பிறவிதான் பூரணமான பெண்.

## ஊர் அழகது

★★★★★★★★★

பெரியவர் விஸ்வநாதர் அந்தக் கிராமத்தில் ஒருபெரிய மனிதர். அவர் ஏழைகள் மீது அளவுகடந்த அன்பு கொண்டவர். அவர் கோவிலுக்குப் போய்வரும் யாத்திரிகர்களுக்காக ஒரு சத்திரத்தைக் கட்டினார். அதில் மனிதனுக்கு மகிழ்ச்சி தரக் கூடியதும் பயன்படக்கூடியதுமான சகலவசதிகளையும் செய்துவைத்தார். பின்னர் பெரியவர் அந்தச் சத்திரத்தை எப்படிப் பயன்படுத்துவது என்ற விதிமுறைகளை எழுதிவைத்தார். அந்தவிதிமுறைகளில் அந்தச் சத்திரத்திற்கு வருபவர்கள் அங்கு எவ்வளவு காலம் வேண்டுமானாலும் தங்கலாம். தங்கள் வயிறார உண்டு களிக்கலாம். அங்கு காணப்படும் உடைகளையும், பொருட்கள் தானியங்கள் எல்லாவற்றையும் பயன்படுத்தலாம் என்று எழுதப்பட்டிருந்தது.

எனினும் அங்குதங்கும் விருந்தினர்கள் ஒருகுறிப்பிட்ட நேரத்தில் தமக்கு உண்மையில் எவ்வளவு தேவையோ அதற்கு மேல் எடுத்துக்கொள்ளக்கூடாது என்றும் சத்திரத்தை விட்டுச்செல்லும் போது அதன் முன்னர் இருந்த

நிலையிலேயே விட்டுச்செல்ல வேண்டும் என்றும் மட்டும் கட்டுப்பாடுகள் இருந்தன....

www.padippakam.com



ஆனால் அந்தச் சத்திரத்தில் வந்து தங்கிய யாத்திரிகர்கள் இந்த விதிமுறைகளைக் கவனத்தில் கொள்ளாமல் மற்றவர்கள் பற்றிய கவலையே இல்லாமல் தமக்குக் கிடைத்த யாவற்றையும் பயன்படுத்தத் தொடங்கினர். ஒவ்வொருவரும் தமக்குத் தேவை இல்லாத போதிலும் கூட தம்மால் முடிந்தமட்டும் அங்குள்ள பொருட்களைத் தமக்குத் தாமே எடுத்துக்கொள்ள முயன்றனர். இதனால் அவர்கள் தமக்குள் சண்டையிடத் தொடங்கினர். பொருட்களை ஒருவரிடம் இருந்து ஒருவர் பறித்தனர். அவற்றை வீணாக்கினர். சமயங்களில் மற்றவர்களுக்கு அது கிடைக்கக் கூடாது என்ற சுயநலமிக்க பொறாமையினால் அவர்கள் அவற்றை அழிக்கவும் செய்தனர்.

இவ்வாறு அங்கு இருந்தவற்றை எல்லாம் வீணடித்துப் பாழாக்கிய பின்னர் அவர்கள் பசியினாலும் வறுமையினாலும், குளிரினாலும் தாம் ஒருவருக்கு ஒருவர் சண்டையிட்டு உருவாக்கிய காயங்களினாலும் வருந்தத் தொடங்கினர்.

பின்னர் அவர்கள் அந்தப் பெரியவர் தமக்கு நிறைவாக பொருட்களைவிட்டு வைத்திருந்ததற்காகவும் சகலவித மோசமான பேர்வழிகளையும் அதற்குள் புகுவதற்கு அனுமதித்ததற்காகவும் அங்கு காவல்காரர்கள் எவரையும் நியமிக்காது போனதற்காகவும் அவரைக் கடிந்து தூற்றவும் செய்தனர்.

27 பக்கம் பார்க்க

# ★ உங்கள் சிந்தனைக்கு..

1. ஐ.நாவில் பணியாற்றிய இந்தியப் பெண்மணி விஜயலெட்சுமி பண்டிட்.
2. மகாபாரதத்தை தமிழில் இயற்றியவர் வில்லிபுத்தூரர்.
3. இமயமலை உலகிலேயே பெரிய மலையாகும்.
4. இலங்கையின் இயற்கைத்துறைமுகம் திருகோணமலை.
5. சீனா இந்தியா எல்லைக்கோடு மக்மோகன் எல்லையாகும்
6. யாழ்ப்பாணம் வடகீழ் பருவக்காற்றால் அதிகமழையைப்பெறுகிறது.
7. இலங்கையில் கலங்கரை விளக்கங்களை உருவாக்கியவர்கள் வெள்ளைக்காரர்.
8. தாஜ்மகால் உலகின் எட்டாவது அதிசயமாகும்.
9. உலகத்தலைவர்களின் இறுதிக்கிரியைகளுக்கு பெருமளவு மக்கள் கலந்து கொள்வது இயற்கை. ஆனால் பேரறிஞர் அண்ணாவின் இறுதிக்கிரியைக்கு கலந்துகொண்ட மக்களே மிக அதிகமாகும். கின்னஸ் புத்தகத்தில் இது இடம்பெற்றுள்ளது.


# ★ இரண்டு அடிமைகள்.

அறிஞர் பிளேட்டோவிடம் வசதி படைத்த ஒருவர் என் மகனுக்கு, கல்விகற்றுத்தர எவ்வளவு கேட்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு 500 வெள்ளிகள் என்றார் பிளேட்டோ. "500 வெள்ளிகளா?" என்று ஆச்சரியப்பட்ட அவர் இதைவிடக்குறைந்த விலையில் ஒரு அடிமையை வாங்கலாமே? என்றார். அதற்கு பிளேட்டோ நீங்கள் சொல்வது சரி. இந்தத் தொகைக்கு ஒரு அடிமையையே வாங்குங்கள். உங்கள் மகனுடன் இரண்டு அடிமைகள் உங்கள் வீட்டிலிருப்பார்களென்றார்.

எம். கதிர்வேல்.

www.padippakam.com





தற்போது இஸ்ரேலில் வசிக்கும் மக்களை யூதர்கள் என அழைக்கிறோம். உண்மையில் இஸ்ரேல் என்றவார்த்தைக்கும் யூதர்கள் என்பதற்கும் நிறைய தொடர்புகளுண்டு.

இஸ்ரேல் என்பதன் அர்த்தம் கடவுளோடு சேர்ந்து போராடும் மக்கள் என்பதாகும். கி.மு.1000 அளவில் பாலஸ்தீனத்தில் இருந்த ஒரு இராட்சியத்தின் பெயரும் இஸ்ரேல் என்பதாகும். அத்தோடு அக்காலகட்டத்தில் பாலஸ்தீனத்தில் இருந்த இன்னொரு இராட்சியத்தின் பெயர் யூதா. இதில் இருந்தமக்கள்தான் தற்போதய யூதர்கள் என்று கருதப்படுகிறது.

யூதர்களின் சரித்திரத்தை இனி நோக்குவோம். கி.மு. இரண்டாம் நூற்றாண்டளவில் சிரியா, அரேபியா பாலைவனங்களிலிருந்து வந்த செமிற் என்ற இனத்தைச்சேர்ந்த, மக்கள் பாலஸ்தீனத்தில் குடியேறினார்கள் (பாலஸ்தீனா என்பது தற்போதய இஸ்ரேல் காஸாபகுதி, வெஸ்ற்பாங் என்பனவாகும்.)

பாலஸ்தீனாவில் குடியேறிய இந்தமக்கள் சிறு, சிறு கூட்டங்களாக வாழ்ந்த நாடோடி மக்களாகும். காலப்போக்கில் இவர்கள் பாலஸ்தீனாவிலிருந்த மக்களோடு கலந்து ஒரினமானார்கள். இவர்களை தற்போதய யூதர்களின் மூதாதையர்களென அழைக்கலாம். ஏறத்தாழ கி.மு. 1000 ல் மத்தியகிழக்கில் ஓர் வல்லரசாக உருவானார்கள். பின்பு கி.மு. 935 அளவில் இந்த இராட்சியம் வடக்கு, தெற்கு எனஇரண்டாகப்பிரிந்தது. வடக்கு இஸ்ரேல் எனவும், தெற்கு யூதாஎனவும் அழைக்கப்பட்டன.

அயல் மக்களுடன் நடைபெற்றுவந்த யுத்தங்களால் இஸ்ரேல் காலப்போக்கில் மறைந்துவிட்டது. ஆனால் யூதா இராட்சியம் ஜெகோவா வழிபாட்டாலும், (யூதரின் கடவுள் ஜெகோவா ஆகும்.) அறிஞர்களின் துணையுடனும், நிலைத்து நின்றது. முன்பு சொன்னதுபோல யூதா நாட்டில் இருந்த மக்களின் பரம்பரைதான் தற்போதய யூதர்கள்.

www.padippakam.com



''மகாராஜாவே! பெண்ணாகப் பிறந்த இவளை யாரேனும் ஒருவனுக்குக் கொடுத்துதான் தீரவேண்டும். இவளுக்குத் தகுந்த புருஷனும் நீ ஆவாய்; சந்தேகமில்லை. ஆனால், எனக்கு ஒரு சத்தியம் செய்து தரவேண்டும்'' என்றான்.

''நீ கேட்பது கொடுக்கக் கூடியதாக இருந்தால் நான் ஒப்புக்கொள்வேன்'' என்றான் சந்தனு.

''இவளிடத்தில் உனக்குப் பிறக்கும் குமாரனை உனக்குப் பின் ராஜாவாகப் பட்டாபிஷேகம் செய்ய வேண்டும்'' என்றான் செம்படவத் தலைவன்.

மன்மத தாபத்தினால் அதிகமாகத் தகிக்கப் பட்டவனானாலும், செம்படவன் கேட்ட இந்த நிபந்தனையை ஒப்புக் கொள்ள அரசனுக்கு மனம் வரவில்லை. கங்காபுத்திரனான தேவவிரதனை விட்டு விட்டு எவ்வாறு வேறு குமாரனுக்குப் பட்டமளிக்க முடியும்? காரியம் நிறை வேறாமல் துக்கத்துடன் தன் நகரமான ஹஸ்தினாபுரத்துக்குத் திரும்பினான். விஷயத்தை யாரிடமும் சொல்லாமல் மனதுக் குள்ளேயே வியாகூலப்பட்டு இளைத்துப் போனான்.

ஒருநாள் தேவவிரதன் தகப்பனைப்பார்த்து, ''அரசனே, உமக்கு எல்லாவித சுகமும் இருக்க ஏன் துக்கத்தில் மூழ்கி யிருக்கிறீர்? என்ன காரணத்தினால் கவலைப்பட்டு இளைத்துப் போய்க்கொண்டு வருகிறீர்?'' என்று கேட்டு விஷயத்தை ஓரளவு வெளியிடச் செய்தான்.

''பிள்ளாய்! நீ சொன்னபடி நான் கவலையுற்றிருப்பது உண்மை. கவலை யாதெனில், குலத்தில் நீ ஒருவன்தான் புத்திரனாக இருக்கிறாய். நீயோ யுத்தத்துக்கு வேண்டிய பயிற்சியில் எப்பொழுதும் ஈடுபட்டிருக்கிறாய் உலக வாழ்க்கை நிலையில்லை. யுத்தம் நிச்சயமாகக் கிட்டும். உனக்கு ஏதாவது அபாயம் வந்தால் நமது குலம் அழிந்து விடுமல்லவா? நீ ஒருவனே நூறு புத்திரர்களுக்குச் சமமாக இருக்கிறாய். ஆனாலும் சாஸ்திரம் படித்தவர்கள் நிலை யில்லா இவ்வுலகத்தில் ஒரு புத்திரன் இருப்பதும்

துக்கம் பாவத்தின் முதற்குழந்தை.

படிப்பகம்

www.padippakam.com



இல்லாமையும் ஒன்றே என்கிறார்கள். நம்முடைய குலத்தின் பாரம்பரிய க்ஷேமம் ஒரு புத்திரன் உயிரிலேயே தங்கி நிற்பது உசிதமில்லை. சந்ததி கெடாமலிருப்பதற்காக ஆசைப் படுகிறேன். இதுதான் என் துக்கத்திற்குக் காரணம்'' என்று அரசன் மகனிடம் சொன்னான். முழுக் கதையையும்சொல்லத் தகப்பன் வெட்கப்பட்டான்.

அறிவாளியான தேவவிரதனுக்குத் தகப்பனாரின் மன நிலை தெரிந்து விட்டது. பிறகு ராஜாவின் சாரதியை அந்த ரங்கமாக விசாரித்து யமுனா நதிக்கரையில் நடந்ததைத் தெரிந்து கொண்டான். அதன் மேல் செம்படவ ராஜனிடம் தானே சென்று அவன் மகள் சத்தியவதியைத் தகப்பனாருக் காகக் கேட்டான்.

செம்படவன் தேவவிரதனுக்குச் சொன்னான். ''என் மகள் ராஜ மகிஷியாவதற்குத் தகுந்தவள். இவளுக்குப் பிறக்கும் குமாரன் ராஜாவாக இருக்கவேண்டுமல்லவா? சந்தனுவுக்குப் பிறகு ராஜ்ய பாலனம் செய்ய நீர் பட்டாபி ஷேகம் செய்யப்பட்டிருக்கிறீர். இதுவே தடையாக நிற் கிறது. என்னை மன்னிப்பீராக''

இதைக் கேட்ட தேவவிரதன், ''இவளுக்கு பிறக்கும் மகன் ராஜாவாக இருப்பான். என் பட்டாபிஷேகத்தை நான் தியாகம் செய்துவிட்டேன்'' என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

''பரம சிரேஷ்டரே! ராஜவம்சங்களில் இதுவரை யாரும் செய்யாததை நீர் செய்துவிட்டீர். நீர் வீரர். இந்தக் கன்னி கைக்கு நீரே பிரபு. இவளைப் பெற்ற தகப்பனைப்போல் நீரே அழைத்துப்போய் அரசனுக்குக் கொடுக்கும் அதிகாரி யாவீர். பெண்ணின் தகப்பனாகிய நான் சொல்வதைப்

படிப்பகம்

www.padippakam.com



பொறுமையுடன் கேட்கவேண்டும். உம்முடைய வாக்கில் எனக்குச் சந்தேகம் இல்லை. ஆயினும் உமக்கு உண்டாகும் சந்ததியைப்பற்றி எனக்கு எவ்வாறு நிச்சயம் உண்டாகும்? மகாவீரராகிய உமக்கு பிறக்கும் மகனும் வீரனாகத்தான் இருப்பான். அவன் ராஜ்யத்தை அபகரிக்கப் பார்ப்பான் அல்லவா? இதுவே பெண்ணைப் பெற்றவனுடைய சந்தேகம்'' என்றான் செம்படவன்.

இந்தச் சிக்கலான கேள்வியைக் கேட்டதும் தந்தையின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதே கருத்தாகக் கொண்ட தேவ விரதன், உடனே எதிர்பாராத ஒரு பிரதிக்ஞை சத்தியம் செய்து தந்தான். ''ஆயுள் முழுவதும் நான் பிரமசரியவிரதம் பூண்டு நிற்பேன்'' என்று செம்படவத் தலைவனுக்குத் தேவ விரதன் பிரதிக்ஞை செய்து உறுதிமொழி தந்தான்.

தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். ''பீஷ்மன்!'' ''பீஷ்மன்!'' என்று அசரீரி கோஷம்உண்டாயிற்று. 'பீஷ்மன்' என்றால் அற்புதமான செயலைச் செய்தவன் என்று பொருள். அதுவே அன்று முதல் தேவவிரதனுடைய பெயராயிற்று. அதன்மேல் கங்காபுத்திரன் சத்தியவதியை அழைத்துச் சென்று தகப்பனிடம் ஒப்புவித்துத் தகப்பனை மகிழ்வித்தான்.

சத்தியவதியும்சந்தனுவும் பெற்றமக்கள்சித்திராங்கதனும் விசித்திரவீரியனும் ஒருவர்பின் ஒருவராக அரசுபுரிந்தார்கள். விசித்திரவீரியனுடைய மனைவிகள் அம்பிகை, அம்பாலிகை. இவர்களின் மக்கள் முறையே திருதராஷ்டிரனும் பாண்டுவும். திருதராஷ்டிரனுடைய மக்கள் நூறு கௌரவர்கள். பாண்டு வின் மக்கள் பஞ்ச பாண்டவர்கள்.

பீஷ்மாச்சாரியார் குலத்துக்குத் தலைவராக எல்லோ-ராலும் பூஜிக்கப்பட்டுப் பாரத யுத்தம் முடியும் வரையில் வாழ்ந்திருந்தார்.

**இராஜன் ஆனாலும் தன் தாய்க்கு மகனே.**

www.padippakam.com



கங்கை + சந்தனு + சத்தியவதி

பீஷ்மர்

சித்திராங்கதன் | விசித்திரவீரியன்

(அம்பிகை) | (அம்பாலிகை)

திருதராஷ்டிரன் | பாண்டு

கௌரவர்கள் | பாண்டவர்கள்

## அம்பையும் பீஷ்மரும்

சத்தியவதியின் குமாரன் சித்திராங்கதன் ஒரு கந்தர்வனோடு சண்டை செய்து அவனால் கொல்லப்பட்டான். அவனுக்குக் குமாரர்கள் இல்லாதபடியால் அவன் தம்பி விசித்திரவீரியனுக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்டது. விசித்திரவீரியனுக்கு வயது வரும்வரையில் பீஷ்மரே ராஜ்யத்தைப் பரிபாலித்து வந்தார்.

விசித்திரவீரியன் விவாகத்துக்குத் தகுந்த வயது அடைந்ததும் காசிராஜாவின் கன்னிகைகளுக்குச் சுயவரம் என்று கேள்விப்பட்டுப் பீஷ்மர் தேர் ஏறிச் சுயம்வரச் சபைக்குச் சென்றார்: ஒருவர் மேல் ஒருவர் போட்டியாகக் கோசலம், வங்கம், புண்டரம், கலிங்கம் முதலிய பல தேசத்து ராஜ குமாரர்கள் சபையில் கூடியிருந்தார்கள். கன்னிகைகள் அழகும், குணமும் உலகப் பிரசித்தியாயிருந்தபடியால், போட்டி மும்முரமாக இருந்தது.

பீஷ்மருடைய புகழ் க்ஷத்திரிய குலத்தில் நிகரற்றிருந்தது. இவர் சுயம்வரத் திருவிழாவைப் பார்த்துப் போக வந்தார் என்றே எல்லோரும் முதலில் எண்ணினார்கள். பெயர்களைக் கொடுத்தபோது இவரும் கொடுத்தார். யௌவன ராஜகுமார

www.padippakam.com



கள் எல்லோரும் ஏமாற்றமடைந்தார்கள். அவர் சென்றது தன் தம்பி விசித்திரவீரியனுக்காக. ஆனால் இது ஒருவருக்கும் தெரியாது

''பாரத சிரேஷ்டருடைய அறிவும் படிப்பும் அதிகம். ஆனால் வயதும் ரொம்ப அதிகமாகவே இருக்கிறது. கிழவ ரான இவருக்கு இச் சுயம்வரத்தில் என்னவேலை? இவருடைய பிரதிக்ஞை என்னவாயிற்று? ஆயுள் முழுவதும் பிரமச் சாரியாயிருப்பேன் என்று இவர் பொய்ப்புகழா பெற்றார்!'' என்றிவ்வாறெல்லாம் ஏளனமாகப் பேசினார்கள். விவாகத் திற்கு இருந்த மூன்று கன்னிகைகளும் கிழவீரரைப் பார்த்து விட்டு நிற்காமல் விலகிப் போனார்கள்.

பீஷ்மருக்கு மகாக்கோபம் பொங்கிற்று. அந்தக் காலத்து மன்னர் குலங்களை ஒட்டிய பண்பாட்டின்படி ''வாருங்கள் யுத்தத்துக்கு!'' என்று சபையிலிருந்த ராஜாக்கள் அனைவரையும் அறைகூவியழைத்து ஒருவராகவே எல்லோரையும் எதிர்த்து விரட்டி, மூன்று கன்னிகைகளையும் தன் தேர் மேல் ஏற்றிக்கொண்டு ஹஸ்தினாபுரம் போகப் புறப்பட்டார். சௌபல தேசத்தரசன் சால்வன் மட்டும் விடாமல் துரத்திச் சென்று தடுத்தான். அவனை மூத்த ராஜகுமாரி அம்பை யானவள் தன் மனத்தில் வரித்திருந்தாள். சால்வனுக்கும், பீஷ்மருக்கும் கடும்போர் நடந்தது. பீஷ்மர் தனுர் வேதத்தில் கரைகண்ட நிபுணர். சால்வன் தோல்வியுற்றான். ஆனால் கன்னிகைகளின் வேண்டுகோளுக்கிணங்கி அவனைப் பீஷ்மர் உயிருடன் தப்பிப்போக விட்டார்.

பீஷ்மர் ராஜகுமாரிகளுடன் ஹஸ்தினாபுரம் போய்ச் சேர்ந்தார். விசித்திர வீரியனுக்கு மூன்று பெண்களையும் விவாகம் செய்ய ஏற்பாடுகள் நடந்தன. கல்யாணப்பந்தலில் எல்லோரும் கூடியிருக்கும் சமயத்தில் அம்பை பீஷ்மரை நோக்கி மெள்ள நகைத்தவாறாக, ''கங்கைபுத்திரரே! தர்மம் அறிந்தவரே! நான் சௌபலதேசத்து ராஜாவான சால்வனை என் மனத்தில் புருஷனாகக் கொண்டுவிட்டேன். நீர் பலாத் காரமாக என்னைக் கொண்டு வந்தீர். சாஸ்திரம் உணர்ந்த

www.padippakam.com



நீர் எவ்வண்ணம் செய்ய வேண்டுமோ அவ்வாறு செய்யலாம்'' என்றாள்.

இப்படி விவாக மண்டபத்தில் அம்பை சொன்னதும் பீஷ்மர் ஆட்சேபணையை ஒப்புக்கொண்டு, தகுந்த துணை நியமித்து அவளைச் சால்வ ராஜனிடம் அனுப்பி வைத்தார். அம்பையின் தங்கைகளான அம்பிகை, அம்பாலிகை இருவரையும் விசித்திர வீரியனுக்கு விவாகம் செய்வித்தார்.

* * *

அம்பை சால்வனிடம் சென்றாள். ''நீ என்னால் முன்னேயே வரிக்கப்பட்டாய். பீஷ்மர் என்னை உன்னிடம் அனுப்பியிருக்கிறார். சாஸ்திரப்படி விவாகம் செய்துகொள்'' என்றாள்.

சால்வராஜன், ''அரசர்களின் மத்தியில் பீஷ்மர் என்னை ஜெயித்து உன்னை வசப்படுத்திச் சென்றார். நான் உன்னை அங்கீகரிக்க முடியாது. நீ அவரிடமே திரும்பிப்போய் அவர் ஆணைப்படி செய்'' என்று சொல்லி, அவளைத் திருப்பி அனுப்பி விட்டான்.

ஹஸ்தினாபுரம் திரும்பி வந்து, பீஷ்மரிடம் அம்ன ப விஷயத்தைச் சொன்னாள்: சால்வராஜன் அம்பையை வரிக்கவில்லை. நீயே இவளை விவாகம் செய்துகொள்ள இப்போது தடையொன்றுமில்லையே? என்று விசித்திர வீரியனைக் கேட்க, ''வேறு ஒரு புருஷன்மேல் மனம் செலுத்தின ஒரு கன்னிகையை நான் விவாகம் செய்து கொள்ள மாட்டேன்'' என்று க்ஷத்திரியப் பண்பாட்டின்மேல் மறுத்து விட்டான்.

''எனக்கு வேறு கதி இல்லை. நீரே என்னை விவாகம் செய்து கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றீர்'' என்று அம்பை பீஷ்மரை வற்புறுத்தினாள்.

''என்னுடைய பிரதிக்ஞையை எப்படிப் பொய்யாக்குவேன்? முடியாது'' என்று சொல்லி விசித்திர வீரியனை ஒப்புக் கொள்ளும்படி மறுபடியும் பீஷ்மர் வற்புறுத்திப் பார்த்தார். ஆனால், அது முடியவில்லை. அதன்மேல் ''நீ

படிப்பகம்

www.padippakam.com



சால்வனையே கேட்டுக் கொள்ள வேண்டும்'' என்று அம்பையை மறுபடியும் சால்வராஜனிடம் போகச் சொன்னார். ஆனால் அம்பை அந்த அரசனிடம் போக வெட்கப்பட்டு பீஷ்மரையே பலவண்ணம் வற்புறுத்தினாள். ''நான் போக மாட்டேன்'' என்று பீஷ்மர் மனையிலேயே பல ஆண்டுகள் கழித்தாள். ஆனால் பீஷ்மர் ஒப்புக் கொள்ளவில்லை.

பிறகு அம்பை சால்வனிடம் போனாள்.

''மற்றொருவன் ஜெயித்த கன்னியை நான் விவாகம் செய்து கொள்ள முடியாது'' என்று அவன் மறுபடியும் கண்டிப்பாய் முன்போலவே சொல்லி விட்டான்.

தாமரைப் புஷ்பம் போல் விசாலமான கண்களையுடைய அம்பை இவ்வாறு ஹஸ்தினாபுரத்திலிருந்து சால்வனிடமும், சால்வனிடமிருந்து ஹஸ்தினாபுரமும் பல தடவைகள் அலைந்து, அலைந்து கண்ணீர் சொரிந்தாள். ஆறுவருடங்கள் சென்றன. அம்பை இதயம் துடித்துத்துடித்து ஒருவித கதியும் காணாமல் வாடினாள். அவளுக்குப் பீஷ்மர் மேல் தாங்க முடியாத கோபம் மேலிட்டது. பல ராஜாக்களிடம் போய் முறையிட்டாள்.

தனக்கு நேர்ந்த அவமானத்திற்காகப் பீஷ்மரை எதிர்த்துக் கொல்லும்படி ஒவ்வொரு அரசனையும் வேண்டிக் கொண்டாள். பீஷ்மர் என்றால் எல்லோருக்கும் பயம்; யாரும் கேட்கவில்லை. பிறகு ஷண்முகப் பெருமானைக் குறித்துக் கடும் தவம் செய்தாள். முருகன் பிரசன்னமாகி அம்பைக்கு ஒருமாலை தந்தான். ''இந்த மாலையை எவன் தரித்துக் கொள்கிறானோ, அவன் பீஷ்மருக்குச் சத்துரு ஆவான்'' என்று, ஆறுமுகம் அம்பைக்கு ஒரு வாடாத தாமரைப் புஷ்ப மாலையைக் கொடுத்தான்.

அம்பை அந்த மாலையைப் பெற்றுக்கொண்டு தன் எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ள ஒவ்வொரு க்ஷத்திரியனிடமும் சென்றாள். ''ஆறுமுகக் கடவுள் தந்த இந்த மாலையைப் பெற்றுக் கொண்டு பீஷ்மரைக் கொல்'' என்று பலரைக் கேட்டுப் பார்த்தாள். பீஷ்மருடைய விரோதத்தை

படிப்பகம்

www.padippakam.com



சம்பாதித்துக் கொள்ள யாருக்கும் தைரியம் வரவில்லை. கடைசியாகத் துருபதராஜனிடம் போய் அவனும் மறுத்து விட்டபின், அவனுடைய அரண்மனை வாயிலில் மாலையைத் தொங்கவிட்டு வனம் சென்றாள்.

பிறகு சில தபோவனர்களிடம் போய்த் தனக்கு நேர்ந்த அவமானத்தைச் சொல்லி முறையிட்டாள்.

''நீ பரசுராமரிடம் போய்க் கேட்டுக்கொள், அவர் உனக்கு வேண்டியதைச் செய்வார்'' என்று அவர்கள் யோசனை சொன்னார்கள். அப்படியே செய்தாள்.

பரசுராமர் அம்பையின் கதையைக் கேட்டுக் கருணை கொண்டு ''குழந்தாய்! உனக்கு என்ன வேண்டும்? சால்வ னிடம் சொல்லி உன்னை விவாகம் பண்ணிக் கொள்ளச் சொல்ல வேண்டுமா? அது என்னால் முடியும்'' என்றார்.

அம்பை, ''வேண்டாம். பீஷ்மருடன் நீர் யுத்தம் செய்து அவரைக் கொல்ல வேண்டும். எனக்கு விவாகம் வேண்டாம். பீஷ்மருடைய மரணமே நான் கோரும் வரம்'' என்றாள். க்ஷத்திரிய சத்துருவான பரசுராமர் பீஷ்மருடன் போருக்குச் சென்றார். யுத்தம் நடந்தது. பீஷ்மரும், பரசுராமரும் சமமான வீரர்கள், சமமான ஜிதேந்திரியர்கள். யுத்தம் பல நாட்கள் நடந்தது. முடிவில் பரசுராமர் தோல்வியடைந்தேன் என்று ஒப்புக்கொண்டு, அம்பையைப் பார்த்து ''அம்மணி! என்னாலானதை நான் செய்தேன். நீ பீஷ்மரைச் சரண் அடைய வேண்டியதுதான்'' என்றார்.

அம்பைக்கு கோபமும் துயமும் தாங்க முடியவில்லை. இமயமலைக்குச் சென்று பரமேசுவரனைக் குறித்துக் கடும் தவம் புரிந்தாள். பரமசிவன் அவளுக்குப் பிரசன்னமாகி, ''நீ இன்னொரு பிறப்பு அடைவாய்; உன்னால் பீஷ்மர் மரணமடைவார்'' என்று வரம் தந்தார்.

காலதாமதமின்றி உடனே மறுபிறப்பு அடைந்து தன் எண்ணம் நிறைவேற வேண்டும் என்பது அம்பையின் ஆசை.

ம.—2

www.padippakam.com



சிதையை அடுக்கி, அதற்கு நெருப்பு மூட்டி, தீயுடன் தீ கலப்பதுபோல், கோபத்தினால் ஜொலித்த அம்பை அதில் குதித்து மாண்டாள்.

பரமசிவனார் வரத்தின்படி அம்பை, துருபதராஜனுக்கு மகளாகப் பிறந்தாள். பிறந்த சில ஆண்டுகளுக்குப் பின் அரண்மனை வாயிலில் யாரும் தீண்டுவதற்குப் பயந்து இன்னும் தொங்கிக் கொண்டிருந்த புஷ்ப மாலையைப் பார்த்து. அதைக் கழுத்தில் தானே போட்டுக் கொண்டாள். தகப்பனான துருபத ராஜா, ''ஐயோ கெட்டேனே! பீஷ்மருடைய விரோதத்தைப் பெற்றோமே'' என்று பயந்து மகளைத் தன் வீட்டிலிருந்து அப்புறப்படுத்தி வனத்துக்கு அனுப்பி விட்டான். தன்னைக் காப்பாற்றிக்கொள்ள அவன் இவ்வாறு செய்தான்.

அம்பை வனம் சென்று தவம் செய்து ஆண் தன்மை அடைந்து, சிகண்டி என்கிற வீரனாக மாறிவிட்டாள். அருச்சுனன், சிகண்டியைத் தன் தேர்ப்பாகனாகக் கொண்டு பாரத யுத்தத்தில் பீஷ்மரை எதிர்த்தான். குருக்ஷேத்திரக் களத்தில் பீஷ்மர் வீழ்த்தப்பட்டு அம்பையின் அடங்காத கோபம் தீர்ந்தது. சிகண்டியின் பிறப்பு ஆதியில் பெண்மை என்று பீஷ்மருக்குத் தெரிந்த படியால் எந்தச்சந்தர்ப்பத்திலும் அவள் மேல் அம்பு பிரயோகிக்க மறுத்துவிட்டார்! சிகண்டியை முன்னிட்டுக்கொண்டு அருச்சுனன் பீஷ்மரைத் தாக்கி ஜெயித்தான். மரணம் கிட்டிய தறுவாயிலும் தன்னை துன்புறுத்திய அம்புகளை ஒவ்வொன்றாக இழுத்து எடுத்து ''இது அருச்சுனனுடைய அம்பு, சிகண்டியினுடையதல்ல'' என்று சொல்லிக் கொண்டு பூமியில் சாய்ந்தார்.

இந்த விஷயம் பின்னால் யுத்தகாண்டத்தில் வரும்.

## தேவயானியும் கசனும்

முன்னொரு காலத்தில் மூன்று உலகங்களையும் ஆள வேண்டுமென்று தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் பெரிய போட்டி நடந்தது. தேவர்களுக்குப் புரோகிதர் பிரகஸ்பதி. அசுரர்களுக்குப் புரோகிதர் அறிவுக்கடலான சுக்ராசாரியர்.

படிப்பகம்

www.padippakam.com



இந்த இரண்டு பிராமணர்களின் பக்கபலத்தைக் கொண்டு யுத்தம் நடந்து வந்தது.

யுத்தத்தில் வீழ்த்தப்பட்ட அசுரர்களையெல்லாம் சுக்ராசாரியர் தம் சஞ்சீவினி வித்தையைக் கொண்டு மறுபடியும் பிழைப்பித்து வந்தார். இறந்த அசுரர்கள் திரும்பவும், திரும்பவும் எழுந்து வந்து தேவர்களுடன் போர் செய்வார்கள். இந்த வைத்திய ஏற்பாடு தேவர்கள் கட்சியில் இல்லை. சுக்ராசாரியர் பிரயோகித்த சஞ்சீவினி வைத்தியம் பிரகஸ்பதிக்குத் தெரியாது. இது தேவர்களுக்குப் பெரும் துயரத்தை உண்டாக்கியது.

தேவர்கள் ஒன்றுகூடி, பிரகஸ்பதியின் குமாரன் கசன் என்பவனிடம் சென்று, ''நீ எங்களுக்கு ஒரு உபகாரம் செய்ய வேண்டும். நீ இளம் பிராயமுள்ளவனாகவும் கண்ணைக் கவரும்படியான அழகு பெற்றவனாகவும் இருக்கிறாய். நீ சுக்ராசாரியரிடம் பிரம்மச்சாரியாகச் சேர்ந்து, அவருக்குப் பணிவிடைசெய்து, அவருடைய நம்பிக்கையையும், அவர் மகளின் அன்பையும் பெற்று அவருடைய சஞ்சீவினி வித்தையை எப்படியாவது கற்றுக்கொண்டு வரவேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார்கள்.

கசன் இதற்கு ஒப்புக்கொண்டு சுக்ராசாரியரிடம் போனான். அசுர ராஜாவான விருஷபர்வனுடைய நகரத்தில் சுக்ராசாரியர் வசித்து வந்தார். அவருடைய வீட்டுக்குப் போய் கசன் அவரை வணங்கி ''அங்கிரஸ் ரிஷியின் பேரன் நான், பிரகஸ்பதியின் புத்திரன். கசன் என்பது என் பெயர். என்னை சிஷ்யனாக ஏற்றுக் கொள்வீராக. நான் தங்கள் கீழ் பூரண பிரம்மசரியப் பணிவிடை செய்வேன்'' என்று வேண்டிக் கொண்டான். தகுந்த சிடன் ஆசார்யனிடம் பிரம்மச்சாரியாக எடுத்துக் கொள்ளக் கேட்டால், அறிவு பெற்ற ஆசார்யன் மறுக்கக்கூடாது ''கசனே! நீ நல்ல குலத்தவன், உன்னை நான் அங்கீகரித்தேன்'' என்று சுக்ராசாரியர் கசனைத் தம் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



கசனும் அநேக வருஷங்கள் சுக்ராசாரியாருக்கும் அவர் மகள் தேவயானிக்கும் ஒரு குறையும் குற்றமுமின்றிப் பணிவிடை செய்து வந்தான். சுக்ராசாரியருக்குத் தன் மகள் தேவயானியிடம் மிகப்பிரியம். கசன் பாடியும், ஆடியும், வாத்தியம் வாசித்தும் அவள் சொன்ன ஏவல் செய்தும் தேவயானியை சந்தோஷப்படுத்தி வந்தான். தேவயானியும் கசனிடம் பிரியம் காட்டி வந்தாள். ஆனால், பிரம்மச்சரிய விரதத்தைத் தவறாமல் கசன் காத்து வந்தான்.

அசுரர்களுக்குக் கசன் சுக்ராசாரியரிடம் சீடனாக அமர்ந்திருப்பது தெரிந்தது. பிரகஸ்பதியின் மகன் எப்படியாவது சுக்ராசாரியரிடம் சஞ்சீவினி வித்தையை அபகரித்துக் கொண்டு போய்விடுவான் என்பது அவர்களுடைய கவலை. ஒரு நாள் வனத்தில் குருவின் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்தபோது, அவனைப் பிடித்துக் கொன்று, துண்டு துண்டாகச் செய்து, நாய்களுக்கு இரையாகப் போட்டு விட்டார்கள். பசுக்கள் தாமாகக் கொட்டிலுக்குத் திரும்பி வந்தன. கசன் வரவில்லை. இதைப் பார்த்துத் தேவயானி சந்தேகபபட்டாள.

''பிரபுவே! சூரியன் அஸ்தமித்தான். உம்முடைய அக்கினிஹோத்திரமும் முடிந்தது. இன்னும் கசன் வீடு வந்து சேரவில்லை. பசுக்கள் தாமாகத் திரும்பி வந்துவிட்டன அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்க வேண்டும். அவனில்லாமல் நான் பிழைத்திருக்க முடியாது'' என்று தகப்பனாரிடம் தேவயானி அழுதாள்.

மகளிடத்தில் மிகுந்த அன்பு கொண்ட சுக்ராசாரியார் சஞ்சீவினி வித்தையைப் பிரயோகித்து இறந்து போனவனை ''வா!'' என்று அழைத்தார். இவ்வாறு அழைக்கப்பட்ட கசன் நாய்களுடைய உடல்களைப் பிளந்துகொண்டு வெளிபட்டுச் சந்தோஷ முகத்துடன் எதிரே வந்து நின்றான். ''என்ன நடந்தது? என் தாமதம் செய்தாய்?'' என்று தேவயானி கேட்க, கசன் ''காட்டில் பசுமேய்த்துவிட்டு விறகுச் சுமையை எடுத்துக் கொண்டு வரும்போது களைப்புற்று ஓர் ஆலமரத்தடி

www.padippakam.com



யில் உட்கார்ந்தேன். பசுக்களும் ஒன்றுகூடி மரத்து நிழலில் நின்றன. அசுரர்கள் வந்து என்னை நீ யார் என்று கேட்டார்கள். நான் பிரகஸ்பதியின் புத்திரன் என்றேன். உடனே அவர்கள் என்னை வெட்டிக் கொன்று விட்டார்கள். எப்படியோ மறுபடி உயிருள்ளவனாகி, நாய்களின் உடலி னின்று உன் சமீபம் வந்து நிற்கிறேன்'' என்றான்.

மற்றொருநாள் கசன் தேவயானிக்காகப் பூப்பறிக்க வனம் சென்றான். அசுரர்கள் அவனை அங்கே பிடித்துக் கொன்று, அவன் தேகத்தை அரைத்துச் சமுத்திர ஜலத்தில் கரைத்துவிட்டார்கள். அவன் போய் வெகு நேரமாகியும் வீட்டுக்குத் திரும்பி வராததைக் கண்டு தேவயானி தகப்ப னாரிடம் சொன்னாள்.

முன்போலவே சஞ்சீவினியைப் பிரயோகித்தார். கசன் கடலினின்றும் உயிருடன் வெளிப்பட்டு வந்து, நடந்த செய் தியைச் சொன்னான்.

அசுரர்கள் கசனைவிட்டபாடில்லை. மூன்றாவது தடவை யும் இவ்வாறே மறுபடியும் கொல்லப்பட்டான். அசுரர்கள் அந்த சமயம் அவன் உடலைச் சுட்டுச் சாம்பலாக்கிச் சாம்பலை மதுபானத்தில் சேர்த்துச் சுக்ராசாரியாருக்கே கொடுத்தார்கள். அவர் கசனுடைய உடலைச் சுட்டுக் கரைக்கப்பட்டிருந்த பானத்தைக் குடித்துவிட்டார். பசுக்கள் மேய்ப்பவனில்லாமல் தாமாக வீட்டுக்குத் திரும்பி வந்தன. தேவயானி தகப்பனாரிடம் ''கசன் வரவில்லை. அவன் கொல்லப்பட்டவன்தான். அவனின்றி நான் ஜீவித்திருக்க முடியாது'' என்றாள்.

''நான் எத்தனை தடவை பிழைப்பு மூட்டினாலும் அவனை அசுரர்கள் கொல்வதற்காகவே தீர்மானித்திருக் கிறார்கள். அறிவு படைத்த நீ எந்தக் காரணத்தினால் ஒருவன் மரணமடைந்தாலும் அதைப்பற்றித் துக்கப்படுவது சரியல்ல. நீ ஏன் வருத்தப்படுகிறாய்? உலகமே உன்னை வணங்குகிறது. நீ விசனப்பட வேண்டாம்'' என்று சுக்ராசாரியர் பெண்ணுக்குச் சமாதானம் சொன்னார்.

www.padippakam.com



# விளம்பரம்

நிங்கள் தவணை அடிப்படையில் கணிப்பொறி வாங்கவிரும்புகிறீர்களா? கிழ்க்காணும் படிவத்தை நிரப்பி கிழ்க்குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பெயர்: ______________________

விலாசம்: ______________________

______________________

______________________

______________________

தாய்நாடு: ______________________

பிறந்தஊர்: ______________________

தொலைதொடர்புசாதனம் கணிப்பொறியுடன் சேர்த்துப்பெற்றுக் கொள்ள விரும்புகிறீர்களா?

தொலைபேசிஇலக்கம்: ______________________

நான் தவணை அடிப்படையில் கணிப்பொறி பெற்றுக்கொள்ள விரும்புகிறேன். மேலதிக விபரங்களை அனுப்பி வைக்கவும்.

கையொப்பம்

Adress:

LANKASOFT
Tværgade 6
4800 Nykøbing F.
Danmark

Or

DIGISOFT
Tværgade 6
4800 Nykøbing F.
Danmark

54858585

S. Swagnanam
Axelborg 7 B, 2. th.
8700 Horsens, tlf. 75 61 25 64
Denmark



படிப்பகம்

# மருத்துவத் துறையில் கதிர் ஏகமூலங்கள்

## மருத்துவ ஆராய்ச்சியில் கதிர் ஏகமூலங்களின் பயன்கள்:-

மருத்துவ ஆராய்ச்சியில் பல்வேறு கதிர் மூலங்களை மருத்துவ வல்லுநர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புற்று நோய்ச் (cancer) சிகிச்சைக்கு ரேடியம் உபயோகிக்கப்பட்டது. ரேடியக் கதிர்கள் புற்றுக்குள் நாளடைந்து புற்று நோய்க் கிருமிகளைக் கொன்று புற்றைக் கரைக்கின்றன. ரேடியம் மிக உயர்ந்த பொருளாதலால் புற்று நோய்ச் சிகிச்சைக்கு செலவு அதிகமாகிறது. அக்குறையைத் தீர்க்க இப்போது கதிர் ஏக மூலங்கள் வந்து விட்டன. ரேடியம் இயற்கையில் மிகக் குறைய அளவில் கிடைக்கிறது. ஆனால் கதிர் ஏக மூலத்தின் மலிவாக எளிதாகப் பெரும் அளவில் தயாரிக்கலாம். புற்று நோய்ச் சிகிச்சைக்கு இப்போது ஆசியாவிலும் இருபதும் முக்கிய இடங்களில் மருத்துவச் சாலைகளில் கதிர் ஏக மூலங்கள் எளிதாகக் கையாளப் படுகின்றன.

நவீன மருத்துவம் (MODERN MEDICINE) நோய்களின் மூலத்தையும், அவற்றைப் பகுத்தறியும் முறையையும் தேட ஆராய்கின்றது. அதன் பின் வரைபடுத்தும் போது நோய்களின் போக்கைக் காணவும் முயன்று வருகின்றது. அதற்கு இப்போது கதிர் மூலகங்கள் (RADIO-ELEMENTS) பெரிதும் துணைபுரிகின்றன. மருத்துவத் துறையினர்களுக்குக் கதிர் மூலகம் சில நோய்களைக் கண்டுபிடித்தல் காட்டும் துணைக் கருவியாகவும் சில நோய்களைப் போக்கும் மருந்தாகவும் உதவி செய்கிறது. கிட்டத்தட்ட உடம்பின் எல்லா உறுப்புகளையும் கதிர் வீசும் மூலகங்களால் சோதிக்கலாம். சில ஏக மூலங்கள் மட்டுமே மருத்துவ ஆராய்ச்சிக்கு ஏற்ற தகுதிகளைப் பெற்றிருக்கின்றன.

www.padippakam.com



(1) உடம்பின் சில உறுப்புகள் குறிப்பிட்ட சில கதிர் ஏக மூலங்களை உட் கொள்கின்றன

(2) குறுகிய அரை ஆயுள் கொண்டிருக்கின்றன. சில கதிர் மூலங்கள்

(3) உடம்பிலிருந்து விரைவாக நீக்கப்படுகிறது கதிரியக்கத்தினை கதிர் மூலங்களின் அரை ஆயுளைப் பொறுத்தது.

'கதிர் ஏக மூலங்கள் மருத்துவத் துறையாளர்களுக்குப் புதிய ஆய்வு முறைகளைத் தந்திருக்கின்றன;

(1) உயிர் ரசாயனத் திரட்சம் (BIOCHEMICAL CONTRATION)

(2) பரவும் முறை அல்லது நகர்ச்சி முறையை அளத்தல் (MEASUREMENTS OF DIFFUSION AND FLOW)

(3) திரவமாக்கிச் செய்யும் நிபுணத்துவம் (DILUTION TECHNIQUE)

(4) கதிர் படவியல் ஆராய்ச்சி (RADIOGRAPHY)

ஒரு மருத்துவக் கூட்டுப்பொருள் (MEDICAL COMPOUND) ஒருங்கின்ற மூலக்கூறுகளைச் சிறிய அளவில் சேர்த்து உடம்பினுள் நுழைத்து விட்டால் மருந்து செல்லும் இடமெல்லாம் திரும்ப போகும் [illegible] மூலகமும் தொடர்ந்து செல்லும். அட்டவணையில் சொல்லப்படும் உபயோகமாகியுள்ள கதிர் ஏக மூலங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றின் அரை ஆயுட்காலமும் காணலாம்.

## மருத்துவ ஆராய்ச்சிக்கு உபயோகப்படும் கதிர் ஏக மூலங்கள்

| எண் | கதிர் ஏகமூலம் | அரை ஆயுள் | மொத்த உபயோகத்தில் பங்கு சதவீதம் |
|---|---|---|---|
| 1. | ஐயோடின் — 131 | 8.08 நாள் | 73% |
| 2. | கோபால்ட் — 60 | 5.27 ஆண்டு | 3.1% |
| 3. | குரோமியம் — 51 | 27.8 நாள் | 3.0% |
| 4. | பாஸ்பரஸ் — 32 | 14.3 நாள் | 0.4% |
| 5. | இரும்பு — 59 | 45.1 நாள் | 6.2% |
| 6. | பொட்டாசியம் — 42 | 12.44 மணி | 0.2% |
| 7. | தங்கம் — 198 | 2.69 நாள் | 0.1% |
| 8. | சோடியம் — 24 | 15.06 மணி | — |

www.padippakam.com



# ஈழத்தமிழரின் ஆபத்தை உணராத அரசியல் நோக்கு

மறைந்த முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியின் கொலை, மானிடத்தை நேசிக்கும் எவராலும் ஏற்றுக்கொள்ளவோ, ஜீரணிக்கவோ முடியாத ஒன்று.

ஆனால் அந்தக் கொலையைத் தொடர்ந்து தமிழக அரசியல் தலைவர்கள் வெளியிட்ட கருத்துக்களும் அதே போன்று ஜீரணிக்க முடியாதவையாகவே அமைந்துவிட்டன.

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்டத்துக்கு இந்தியாவின் உதவிக்கரம் அவசியமான ஒன்று என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. அன்னை இந்திரா காந்தி, உயிரோடிருந்த காலத்தில் ஈழத் தமிழர்களுக்கு அவர் மூலம் விமோசனம் கிடைக்கும் என்று முழுத் தமிழ் இனமும் எதிர்பார்ப்போடு இருந்ததை அவரது மரணத்தின்போது அறிய முடிந்தது. அவரது மரணத்தின் பின்னர் பதவிக்கு வந்த ராஜீவ் காந்தி, இலங்கைத் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காண முயன்றதும் அந்த முயற்சியில், இந்தியாவின் நலன்களை முதன்மைப்படுத்த எத்தனித்ததில் ஏற்பட்ட விளைவுகளும் முழு உலகுமே அறிந்தவை.

"இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதல் துரதிர்ஷ்டவசமானது" என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் திரு.



காசி ஆனந்தன் அண்மையில் கூறியிருந்ததும் ---

திரு. காசி ஆனந்தன், மறைந்த திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்து (இறப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்னர்) இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக வெளிவந்த செய்தியும், திரு.ராஜீவ் காந்தி மீண்டும் பதவிக்கு வந்தால் இலங்கைப் பிரச்சினையை அவர் வித்தியாசமாகக் கையாள்வார் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. இத்தருணத்தில் திரு.காந்தியின் கொலை தமிழ் மக்களுக்குப் பெரும் ஏமாற்றமே.

கொலை நடந்து முடிந்ததும், வழக்கம் போலவே பல்வேறு வகையான ஊகங்கள் வெளியிடப்பட்ட போதிலும் விடுதலைப் புலிகள் மீதே பலமான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. கொலை நடந்த சில மணி நேரங்களிலேயே தமிழகம் கொந்தளிக்கத் தொடங்கி விட்டது. ராஜீவின் இந்திரா காங்கிரஸ் கட்சித் தொண்டர்களும், அவர்களின் கூட்டணியினரான அ.தி.மு.க. தொண்டர்களும் கொதிப்படைந்து அவர்களுக்கு எதிரான கட்சித் தலைவர்களின் சொத்துக்களுக்கும் கட்சி அலுவலகங்களுக்கும் சேதம் விளைவிக்கத் தொடங்கி விட்டனர். தமிழகம் எங்கும் வன்முறை அலை வெடித்துச் சிதறிய அந்த நேரத்தில் வெளியிட்ட அறிக்கைகள் அவர்களின் அரசியல் அறிவை அம்பலப்படுத்தி நின்றன.

முன்னாள் தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். மறைந்த பின்னரும் தமிழக மக்களின் தெய்வமாக மதிக்கப் படுபவர். அந்த மாமனிதரின் அரசியல் வாரிசாக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு அவரது கட்சிக்குத் தலைமையேற்று நடத்துபவர் முன்னாள் நடிகை செல்வி. ஜெயலலிதா. ராஜீவின் கொலையைத் தொடர்ந்து கொதிப்படைந்திருந்த தமது தொண்டர்களை அமைதி காக்குமாறு கோருவதை விடுத்து, ஈழத்தமிழர்களை உடன் வெளியேற்ற வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, எம்.ஜி.ஆரின் பெயருக்கே களங்கத்தை ஏற்படுத்தியுள்ளார். கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று புகார் தெரிவிக்கப் பட்டதும் தமிழகத்திலிருந்த சுமார் மூன்று லட்சம் தமிழர்களும் 'நடுங்கிப் போய் இருந்த வேளையில், ஈழத்தமிழர்களை உடன் வெளியேற்றுங்கள் என்று தாம் விடுத்த கோரிக்கை,

www.padippakam.com





தமது தொண்டர்களின் தாக்குதல் ஈழத் தமிழர் களை நோக்கி திசைதிருப் பக் காரணமாகி விடும் என்பதை செல்வி ஜெய லலிதா சற்றேனும் எண் ணிப்பார்க்க விலலை. இந்த வேளையிலும் தமி ழக மக்கள் அந்த அம் மையாரின் அரசியல் அறிவைப் புரிந்து கொண் டதால் அமைதி காத்தனர் என்றே கூறவேண்டும்.

மறைந்த தலைவர் எம்.- ஜி.ஆர். ஆட்சியிலிருந்த போது சென்னை விமான நிலையத்தில் பாரிய குண்டு ஒன்று வெடித்தது. நாற்பதுக்கும் அதிகமான உயிர்களைப் பலி கொண்ட அந்த விமான நிலைய குண்டு வெடிப்புக் கும் ஈழ விடுதலை இயக் கங்களே காரணம் என்று கூறப்பட்ட போதிலும் எம். ஜி.ஆர்.சம்பவத்தைக் கண் டித்தாரே யொழிய தமிழர் களை வெளியேற்ற வேண் டுமெனக் கோரிக்கை விடுக்கவில்லை.

பின்னர் ஈழத்தின் விடு தலை இயக்கங்களுக்கு தமது சொந்தப் பணத்தி லிருந்து கோடிக்கணக் கான ரூபா வழங்கி அவர் களை உற்சாகப் படுத்தி னார். அந்த மாமனிதரி னது ஆசனத்திலமர்ந்தி ருக்கும் இந்த அம்மையார் இப்படியொரு அறிக் கையை வெளியிட்டதன் மூலம் தமது அரசியல் குருவுக்கே களங்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

இந்தியாவின் தேசிய ஒற் றுமையையும் ஐக்கியத் தையும் பாதுகாக்கக்கூடிய ஒரேயொரு இயக்கம் என்று நம்பப்படுகின்ற காங்கிரஸின் தமிழ்நாடு பிரிவுத் தலைவரான திரு. வாழப்பாடி ராமமூர்த்தி யும் இதேபோன்ற ஓர் அறிக்கையை வெளியிட்டு காங்கிரஸ் கலாசாரத் துக்கே களங்கத்தை ஏற் படுத்தி விட்டார்.

இந்த இரு தலைவர்களின் கோரிக்கையையும் தமிழக மக்கள் காதில் வாங்கிக் கொள்ளாதது அவர்க ளின் அரசியல் அறிவை யும் பண்பையுமே புலப்ப டுத்தி நின்றது.



கொல்லப்படுவதற்கு முன்னர் சென்னை விமான நிலையத்தில் கடைசிப்பபத்திரிகையாளர் மாநாட்டில்



விமானநிலையத்தைவிட்டு காரில் புறப்படுகிறார்



...ங்களிடையே ராஜீவைத் ...ஜயந்தி நடராஜன் எம்.பி



சிறுவன் ராஜீவ், தாத்தா நேருவின் அரவணைப்பில் அருகே தாய் இந்திரா

படிப்பகம்

www.padippakam.com



# இலக்கியக் காட்சிகள்

இரண்டு நாட்களுக்கு முன்பு வீட்டிலிருந்து வெளியே புறப்பட்டுக் கொண்டிருந்தேன். மாங்கனி சுருங்கியது போன்ற மேனிபடைத்த முதியவர் ஒருவர், நடுங்கும் கரங்களோடு என்னைக் கட்டி அணைத்துக்கொண்டு வாழ்த்துமாரி பொழிந்தார். அவர் கண்கள் நீர் முத்துமாலைகளை அணிந்து கொண்டிருந்தன. அவர் யார் என்று சொன்னால் உங்களால் புரிந்துகொள்ள முடியாது. பேரளம் மகாதேவ முதலியார் என்பது அவர் பெயர். முதலியார் பட்டத்தை அவர் தன் பெயருடன் இணைத்துக்கொள்வது கிடையாது. ஆரம்பகாலச் சுயமரியாதைக்காரர்—நான் பள்ளி மாணவனாக இருந்தபோது என்னை அழைத்துப் பேரளத்தில் கூட்டங்கள் நடத்தியிருக்கிறார்.

தஞ்சைத் தரணியில் எழில் மிகுந்த ஊர்களில் ஒன்றுதான் பேரளம். சுயமரியாதைப் பிரச்சாரத்தை வெற்றிகரமாக நடத்திய அந்தப் பெரியவர், தந்தை பெரியாரின் அன்புக்கும், அறிஞர் அண்ணாவின் மரியாதைக்கும் உரியவராவார்.

அவருடைய தழுதழுத்த குரல், என் நெஞ்சுக்கு இதமாக இருந்தது. பலஹீனமடைந்து விட்ட அந்த உடலின் அரவணைப்பில் எனக்குச் சிறிது நேரம் ஏற்பட்ட அந்தச் சுகம், புதிய தெம்பினை ஊட்டியது.

இப்படிப்பட்ட முதிர்ச்சியடைந்த உறுதியான வயோதிக வைர நெஞ்சர்களும் இருக்கிறார்களே என எண்ணி ஆறுதல் கொண்டேன். பிறகு, அவரை நானே என் காரில் அழைத்துக் கொண்டுபோய் அவர் வீட்டில் விட்டுச்சென்றேன்.

அந்தத் தள்ளாத நிலையில் அவரே அவ்வளவு தொலைவு நடந்தே என் வீட்டுக்கு வந்திருக்கிறார். அவர் என்னைப் பரிவோடு வாழ்த்தியபோது பாசஉணர்வு பீரிட ஒன்றைச் சொன்னார்; ''நாலடியார் கூறுவதுபோல யானையின் நட்பு கூடாது. நாயின் நட்புதான் சிறந்தது'' என்று!

அவர் கூறிய வாசகத்தை நினைவில் அசைபோட்டுக் கொண்டே இருந்த நான், அதற்குரிய நாலடியார் பாடலைத் தேடினேன். கிடைத்தது. அதுமட்டுமல்ல; வேறு சில பாடல்களும் கிடைத்தன.

படிப்பகம்

www.padippakam.com



''யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும், எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய.''

யானை, பலகாலம் பழகினாலும்கூட என்றைக்காவது ஒரு நாள் பழகியதை மறந்து—தன்னைப் பாதுகாத்து உணவு கொடுத்து வளர்த்த பாகனையே கொன்று விடும். நாய் அப்படியல்ல, தன்னை வளர்த்தவன் தன்மீது வேலை எறிந்து குத்திவிட்டாலும், அந்த வேல் அதன் உடலில் தைத்திருக்கும்போதே அவனுக்கு நேராக அன்பின் அறிகுறியாக வாலை வளைத்து ஆட்டிக்கொண்டிருக்கும், என்பது அந்தப் பாடலுக்குப் பொருள்.

அடடா! பெரியவர் நீண்ட காலத்துக்குப் பிறகு என்னை சந்தித்தாலும் கூட எவ்வளவு பெரிய உருக்கமிகு உண்மையை எனக்கு உணர்த்தி விட்டுச் சென்றுள்ளார் என்பதை எண்ணிடும்போது பெருமூச்சு வெளிப்படுகிறது.

நட்பின் இலக்கணம் பற்றிப் பழந்தமிழ்ப் புலவர் பெருமக்கள் எத்துணைக் கருத்துக்களை வாரி வழங்கியிருக்கின்றனர். நட்பின் சிறப்புக்கு ஒரு தனி நாகரீகமே வகுத்துக் காட்டுகிறது நாலடியார்.

ஒருவரை நண்பராக ஆக்கிக்கொண்ட பிறகு, அவர் நட்புக்கு ஏற்றவரல்ல எனத் தெரிந்து விட்டால எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதையும், பின்வரும் நாலடியார் பாடல் விளக்குகிறது.

''தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தார் ஆயின் அவரைத்
தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை
தம்முள் அடக்கிக் கொளல்''

நண்பராக ஒருவர் ஆனபிறகு, அவர் நட்புக்கு ஏற்ற பண்புடையவர் அல்லர் என்று விளங்குகிறது. அதற்காக அவரை உடன் விலக்கிவிடாமல் அவரைத் தமது உண்மையான நண்பரைவிட மேலாக மதித்து, அவர் நட்புக்குத் தகுதியுடையவரல்ல என்பதைப் பிறர் அறியாமல் மறைத்து தனக்குத்தானே உண்மையை அடக்கிக் கொள்வர்; என்பது இந்தப் பாடலின் விளக்கவுரையாகும்.

உடன்பிறப்பே, இலக்கியம் எவ்வளவு பொருள் பொதிந்த புதையலாக இருக்கிறது பார்த்தாயா?

''இலக்கியச் சந்தைக்கு ஏகுவோம் வாரீர்!'' என்று இசைச்சித்தர் ஒரு இனிய பாடலை இசைத்துக் கேட்டிருக்கிறாய் அல்லவா? அது எவ்வளவு இன்பமானது!

அன்புள்ள, மு.க

படிப்பகம்

# விடியலுக்கில்லை தூரம்.

★★★★★★★★★★★★★★★★★

மகளே..
எங்கள் சமுதாய
சிறகுகளில்
உன் மனதை
உலைய விடாதே.!

அவை உன்
வருங்கால வாழ்வுக்கு;
தடையூறாகவே
இருக்கும்
எப்போதும்
உனக்கென..
ஒரு கொள்கையை
வகுத்துக் கொள்
சுதந்திரக் காற்றை
சுவாசிக்க கற்றுக்கொள்
இந்தப் பரந்த உலகில்
உன் பாதைக்கு
ஒரு வழி தேடு;
அடக்கப்பட்ட பெண்
மக்களின் விலங்கை
உடைத்தெறி...
கொடுக்கப்பட்ட
இரத்தத்திற்கு
கணக்குக் கேள்?
விடியலைப் பார்த்திட
உறுதி கொள்.



www.padippakam.com





# வாசகர் வட்டம்

நியசென்ரர் வங் 36.2.கி.ப.
83 80 நிய
17.05.91

அன்புடன் அரும்பு ஆசிரியர் அருண்
அவர்கட்கு!

தங்களின் அரும்பு இதழ் 4 ஐ தற்செயலாக ப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மிக்க மகிழ்வுற்றேன். தனியொரு மனிதனாக தமிழ் இல க்கிய நாடகக்காரராக தாங்கள் செய்யும் பத்தி ரிகை வேலை உணர்வுள்ள பெரும் பாராட்டக்கூ டியதொன்றே.

எண்ணம் எழுதி உங்கள் எண் ணத்தை, உங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்கள். தமி ழர் கல்வியும் கலாச்சாரமும் தொடர். நாடகசாஸ்தி ரம் ரொம்பவும் சூட்சுமமானது. என்கின்ற கரு

படிப்பகம்

www.padippakam.com



த்தில் "தாயா தாரமா" என்கின்ற பகுதியும் விருப்புடன் வாசிக்கக்கூடிய பகுதிகள். மகாபாரதம் தொடரை வெளியிடுவது மிகவும் ஆக்கபூர்வமான வேலை.

ராணி முத்துவையும் தமிழக மஞ்சள் பத்திரிகைகளையும் கவனத்தில் எடுக்காது இலக்கியத்தரமுள்ள அரும்பே மிகத் தேவை. நடிகர்கள் சாப்பிடுவது, உறங்குவது, மதுபாவிப்பது எமக்கு ஏன் அவை? அதை ரசிக்க ஒரு கூட்டம் இருக்குமெனில் அவர்கள் திரைச்சித்திராவையோ, பொம்மையையோ பேசும் படத்தையோ படித்துத் தொலைக்கட்டுமே. "அரும்பு" மேற்சொன்ன அந்தக் கூட்டத்தையும் தனது சேவையால் உள்கொணர்ந்து தரமான வாசகர் கூட்டத்தை உருவாக்க வேண்டும்.

அரும்பு வாசகர் கூட்டத்தினிடையே ஆக்கங்களை வேண்டி வாசகர்களை ஊக்கப்படுத்தலாம். புத்தக அமைப்பில் நிறைய பக்கங்கள் வீணடிக்கப்படுகின்றன. கையெழுத்தை சிறிதாக எழுதலாம். அழகாக எழுதக்கூடியவர்களின் உதவியைக் கோரலாம். எழுத்துப்பிழைகள் மிக

படிப்பகம்

www.padippakam.com



ஞானம். மொத்தத்தில் அரும்புவிழந்த சொந்தவாசகர் கூட்டமும் சொந்த ஆக்க இலக்கியமும் தேவை. பெரும்பகுதி இரவலாகவே உள்ளது.

உங்கள் பணி தொடரட்டும்.



ஊர் அழூதந்து, முன்பக்கத் தொடர்

இந்த முறையில்தான் இந்த உலகிலும் நமக்கு நன்மை செய்த பெரியோர்கள் வகுத்த முறையின்படி வாழாமல் நமது சொந்த விருப்பப்படியே வாழ்ந்து வருபவர்கள் இருந்துவருகிறார்கள். இவர்கள் நமது சொந்தக் குறுகிய வாழ்க்கையை மட்டுமல்லாமல் பிறரது வாழ்க்கையையும் நாசமாக்குகின்றனர். இவர்கள் தம்மில் ஒருவரையொருவரையும் கடவுளையும் உலகத்தையும் எவரையும் எதையும் குறைகூறுகின்றனர். ஆனால் இவர்கள் தம்மை மட்டும் குறைகூறிக் கொள்வதேயில்லை.

இல்லறம்
இனிமை பெற
ஒற்றுமை அவசியமானதாகும்.

படிப்பகம்

# நினைவாக!



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

அதிர்ச்சியில் அதிர்ச்சி
மிக்கேலே உனைப்
பிரிந்தது பேரதிர்ச்சி
தொடர்கிற துயரில்
வருகிற நிலையில்
வாழ்வது மனிதனின்
வாழ்வு சூரிய
ஒளியில் வெண்முகில்
கதிரில் சேர்ந்தனை
தேவனின் அழைப்பு
நண்பனின் பிரிவால்
துயருறும் குடும்பம்
ஆறுதல் பெற்றிட
நாமும் தேவனின்
திருவடி தினம்
தினம் தொழுது
நினைவினில் வைத்திருப்போமே.

www.padippakam.com

# வாசகர்களே...

★ உங்கள் ஆக்கங்களை மகிழ்வுடன் வரவேற்கிறோம்.

★ இதில் வரும் ஆக்கங்களுக்கு அவற்றின் ஆக்கதாரர்களே பொறுப்பு.

★ ஆக்கங்களை பரிசீலனை செய்ய ஆசிரியர் குழுவிற்கு உரிமை உண்டு.

•ARUMPU•

AXELBORG 7B 2TH
8700 HORSENS
DENMARK
T.P. 75612564





அன்பளிப்பு:- 10kr



படிப்பகம்

www.padippakam.com

பொங்கு தமிழ்க்கு இன்னல்
விளைந்தால் சங்காரம்
நிசமென்று சங்கே முழங்கு!



CHANCHIVE
...marksgade 10
...0 Holstebro
...mark

ARU 2

படிப்பகம்